# தமிழ் கல்விநிலையம் – மவுண்றுாயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

## ஆண்டு 6 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் **30.05.2020** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவருக்கும் பணிவான வணக்கம் !

இன்று எனது தலைப்பு

### பல்திறன் தன்மையை வெளிக்கொணர்வோமாக !!!



பல்திறன் என்பது ஒருவர் பல்வேறுபட்ட தனித்திறன்களை உடையவராக இருத்தல்.

பல்திறன்களை நோக்கும்போது,

ஒரு மனிதனுக்கு இயல்பாகவுள்ள பகுத்தறிவுத்திறன், இசையறிவு, ஒரு காட்சியை உள்வாங்குதல், வாய்மொழித்திறமை, தர்க்கவியல், உடல்சார்ந்த அசைவுகள் மூலம் உணருதல், அடுத்தவர்களைப் புரிந்துகொள்ளுதல், பிறருடன் இனணந்து செயற்படுதல், சுயதிறமையை உணருதல் என பல்வேறுபட்ட திறன்களாகும்.

முதலில் இவ்வாறான திறன்களை நாம் எவ்வாறு கண்டறிவது? இருக்கும் திறனை எவ்வாறு பயன்படுத்துவது? வளர்ச்சியடையச்செய்வது? போன்ற சிந்தனைகள் மனதில் எழவேண்டும்.

ஒரு மனிதன் சமூகத்தின் முன்னிலையில் இத்தகைய திறன்களை எவ்வாறு வெளிக்கொணரலாம் ?

மனிதனுக்கு இயல்பாலும் நடைமுறை சூழ்நிலைகளாலும் கற்றுத்தேர்ந்த அறிவுகளாலும் அனுபவங்களாலும் ஏற்படுகின்ற திறன்களை வெளிக்கொண்டு வரலாம்.

இத்தகைய திறன்கள் எதிர்காலத்தில் எமது வாழ்க்கையின் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு வழிவகுக்கும்.

எனவே சிறுவர்களாகிய நாமும் சிறு பராயத்தில் இருந்தே கல்வியை கற்றுத்தேர்ந்து, எமக்குள் இருக்கும் திறன்களை கண்டறிந்து, உயர்வாக வாழ்வதுடன் தீர்வுகளையும் ஆலோசனைகளையும் வழங்கி, சமூகத்திற்கும் எமக்கும் பல நன்மைகளையும் விழிப்புக்களையும் ஏற்படுத்த பல்திறன் தன்மையை வெளிக்கொணர்வோமாக என கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. ராஜேஸ்வரி குலவீரசிங்கம்.